
# ஆயரின் ஆசி மடல்



*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர,*
*சகோதரிகளே,*

ஆண்டவர் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த மாதத்தில் அரசு தேர்வு எழுதவிருக்கும் மாணவ, மாணவியர் அனைவரும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற வாழ்த்துகிறேன். இந்த லெந்தென்னும் தபசு நாட்களில் பிரவேசித்து ஆண்டவரின் அங்க மகத்துவங்களை தியானித்துக் கொண்டிருக்கும் உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. இந்த மாதத்தின் வாக்குத்தத்த வசனம், **“கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்”** (ஏசாயா 25:8) என்ற வார்த்தையின்படி இந்த மாதம் உங்கள் கண்ணீரை துடைக்கும் கர்த்தராக தேவன் வெளிப்படுகிறார்.

மனித வாழ்க்கை இன்பம், துன்பம் நிறைந்தது. இன்பம் என்றால் சிரிக்கிறோம், துன்பம் என்றால் அழுகிறோம். எப்பொழுதெல்லாம் மனிதன் அழுகிறான் என்றால் 1) நினைத்த காரியம் நடக்காத நேரத்தில் 2) தீராத வியாதியில் 3) கடன் தொல்லை கஷ்டத்தில் 4) தாங்கமுடியாத பிரச்சனையில் 5) நம்பிக்கை இல்லாத சூழ்நிலையில் 6) எதிர்பாராத குழப்பம்/மரணம் ஆகிய தருணங்களில்

இயேசு கிறிஸ்துவும் கண்ணீர் விட்டார், நமது வாழ்விலும் கண்ணீரோடும், அழுகையோடும் இந்த உலக வாழ்வை கடந்து வருகிறோம். ஆனாலும் நம் கர்த்தர், அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள் என்ற வேத வசனத்தின்படி கண்ணீரை மாற்றுவாராக.

இஸ்ரவேல் மக்கள் பாபிலோனில் அடிமைகளாய் இருந்தனர். அவர்களுடைய கண்ணீரை துடைத்து நிந்தையை நீக்கினார், அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. நமது ஆண்டவர் நமது கஷ்டத்தை பார்த்து கண்ணீரைத் துடைக்கிறார். திருமறையில் கர்த்தருடைய பிள்ளைகள் எந்த நேரத்திலெல்லாம் கண்ணீர் விட்டு அழுதார்கள் என்று சிந்திப்போம்.

**1. குறைவினால் வரும் கண்ணீரைத் துடைப்பார் :**

மனிதர்களாகிய நாம் நிறைவாக வாழ விரும்புகிறோம். வாழ்வில்



குறைவு அல்லது தேவை ஏற்படும்பொழுது சுயமுயற்சி செய்கிறோம். சிலது நமக்கு கிடைக்கிறது, சிலது கிடைப்பதில்லை. “அன்னாள் குழந்தையில்லாத குறை”யினால் இறைவனிடம் கண்ணீர்விட்டு அழுகிறாள், “அவள்போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள்” (1சாமு 1:10) ஆண்டவர் அவளுடைய கண்ணீரைத் துடைத்தார்.

சாரிபாத் விதவை வீட்டில் **“உணவு பற்றாக்குறை”** “பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக போகிறோம்”. (1இரா 17:12) என்று அவள் கூறினாள். அந்த நிலைமையிலும் எலியாவின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து ஒரு அடையை சுட்டுக் கொடுத்ததின் நிமித்தமாக அவளும், அவள் பிள்ளையும் பஞ்சம் முடியும் வரை உணவு குறையாமல் போஷிக்கப்பட்டனர். **“ஞானத்தில் குறைவு”** “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்”. (யாக் 1:5) என்ற வார்த்தையின் படி படிக்கும் பிள்ளைகள், பெரியவர்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாய் இருந்தால் நாம் கர்த்தரை நோக்கி கூப்பிடும்பொழுது ஞானத்தின் குறைவை நீக்குவார்.

**2. நிந்தை / உபத்திரவம் மூலம் வரும் கண்ணீர் துடைப்பார்**

மனித வாழ்வில் நிந்தை, அவமானம், உபத்திரவம், பரியாசம் ஏற்படும்பொழுது கண்ணீர் விட்டு அழுகிறோம். அப்படிப்பட்ட நேரத்தில் தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்.

யோபு தனது “வாழ்வில் இழப்புகள் மத்தியில்” வாழ்ந்தபொழுது அவர் சொல்கிறார், ‘‘என் சிநேகிதர் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது”. (யோபு 16:20) என்று கண்ணீர் துடைக்கும் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்.

தாவீதின் வாழ்விலும் அதிகமான உபத்திரவம், நிந்தை, பாடுகளை சகித்தார். “நான் அவர்களுக்கு நிந்தையானேன்; அவர்கள் என்னைப் பார்த்து தங்கள் தலையைத் துலுக்கிறார்கள்”. (சங் 109:25)

நிந்தையையும் அவமானத்தையும் என்னை விட்டு அகற்றும். (சங் 119:22). நிந்தைகள் அவமானங்கள் மூலம் வரும் கண்ணீரே தாவீதுக்கு உணவாயிற்று. யோபு, "தாவீது வாழ்வில் நிந்தை, அவமானம் மூலம் வந்த கண்ணீரை துடைத்த ஆண்டவர்" நமது கண்ணீரையும் நிச்சயமாய் துடைப்பார்.

**3. வியாதி / மரணத்தினால் வரும் கண்ணீரைத் துடைப்பார் :**

மனித வாழ்க்கையில் பல நேரங்களில் கொடிய வியாதி / அகால மரணம் வரும்பொழுது கண்ணீர் விட்டு அழுகிறோம். எசேக்கியா ராஜா உண்மையும், உத்தமமும் கர்த்தர் பார்வையில் நலமானதை செய்கிறவனாய் இருந்தான். (ஏசாயா 38:1-3)மரணத்துக்கு ஏதுவான வியாதி அவனை சூழ்ந்தது, ஏசாயா தீர்க்கன் வீட்டு காரியங்களை ஒழுங்கு பண்ணும் என்று கூறிவிட்டான். (ஏசாயா 38:3) எசேக்கியா மிகவும் அழுதான், (ஏசாயா 38:5) உன் விண்ணப்பத்தை கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன் என்ற வாக்கை கொடுத்து அவனுடைய கண்ணீரை ஆண்டவர் துடைத்தார்.

"லாசரு மரித்தபொழுது" மார்த்தாள், மரியாள், மற்றும் யூதர்கள் கண்ணீர்விட்டு அழுதார்கள். இயேசுவும் கண்ணீர் விட்டார். (யோவான் 11:35). கண்ணீர் விட்ட ஆண்டவர் அவர்களுடைய கண்ணீரைத் துடைத்தார். எசேக்கியா ராஜா, மார்த்தாள், மரியாள் இவர்களை போன்ற சூழ்நிலையில் கண்ணீர் வடிக்கிற உங்களுடைய கண்ணீரையும் நம்முடைய ஆண்டவர் துடைப்பார்.

**முடிவுரை**

புதிய மாதத்தில் பிரவேசிக்கிற நாம் கடந்த மாதத்தில் அனுபவித்த பாடுகள் எல்லாவற்றையும் இந்த புதிய மாதத்தில் மாற்றுவாராக. அன்னாள், சாரிபாத் விதவை ஆகியோரின் வாழ்வில் ஆண்டவர் குறைவுகளை அகற்றி நிறைவை கொண்டு வந்தது போல, யோபு, தாவீதை போன்று நிந்தை அவமானத்தின் பாதையில் கடந்து வந்த உங்கள் வாழ்க்கையில் உள்ள எல்லா அவமானத்தையும், கஷ்டத்தையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாற்றுவார். எசேக்கியா, லாசரு போன்று வியாதி மரணத்தின் பாடுகளில் இருக்கிற உங்கள் வாழ்க்கையில் உள்ள கண்ணீரை ஆண்டவர் நிச்சயம் மாற்றுவார், கலங்காதீர்கள்.

*இறை பணியில்,*

**Rev. R.A.J. செல்வின்துரை**



# லெந்துகால கன்வென்ஷன் செய்தியாளர்கள் 2023

**நேரம் : மாலை 6.30 மணி**

| | |
|---|---|
| மார்ச் 4,5 | **அருள்திரு. டேவிட்,** கோயம்புத்தூர் |
| மார்ச் 11,12 | **அருள்திரு. குணகுமார்,** சென்னை |
| மார்ச் 18,19 | சகோ. **ராஜன்** I.R.S., சென்னை |
| மார்ச் 25,26 | சகோதரி. **சகுந்தலா அசரியா,** ஆலங்குளம் |
| ஏப்ரல் 1, 2 | சகோ. **K. பட்டுராஜ் செல்வன்,** தூத்துக்குடி |
| ஏப்ரல் 3,4,5 | சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்,** அந்தமான் |
| ஏப்ரல் 9 | சகோ. **J. ஜெகத் ரட்சகர் இன்னிசை குழு,** சண்முகபுரம் |

**TUTICORIN PASTORATE**

## ST. PATRICK'S CO-CATHEDRAL

## 2 GOLD MEDAL WINNERS LIST 2022

### HIGHER SECONDARY

**I Prize JAFFRIN HANNAH .D 574**
D/o. Mr. T. David Prabaharan

**II Prize HEBHZBAHH .D 572**
D/o. Mr. M. Deligate

### S.S.L.C.

**I Prize SELIN .R 467**
D/o. Mr. J. Ruban Joseph Julius

**II Prize DANIEL SAMRAJ .C 454**
S/o. Mr. S. Charles

# பிறந்தநாள் ஆசரிப்பவர்கள்

**மார்ச் 1**

செல்வன். C. சதீஷ் ஜாண் பென்னி
செல்வி. M. அட்லின்
திரு. P. பொன்ராஜ்
செல்வி. S. ரினிஷா
திருமதி. செல்வராணி
திரு. G. ஜெபகுமார்

**மார்ச் 2**

திருமதி. S. வளர்மதி சங்கர்
செல்வி. A. ஜெபி சாரராள்
திரு. M. மூர்த்தி
திருமதி. இந்திரா விக்டர்
திருமதி. F. பிரீத்தி பிரட்ரிக்
திருமதி. V. பியூலா
திரு. S. சார்லஸ்

**மார்ச் 3**

திரு. G. ஆபிரகாம் லிங்கன்
திருமதி. M. மல்லிகா மோகன்
திருமதி. E. ரெஜினா எட்வர்ட்சிங்
திருமதி. S. ஆஷா
திரு. P. ஆபிரகாம்
செல்வன். டேனியல் தங்கராஜ்
திருமதி. D. பாக்யநேசம்
திரு. S.M. பால்ராஜ்
திருமதி. S. அனந்தம்மாள்
திருமதி. S. அமலா ஜஸ்மின்
செல்வன். T. சந்திரசேகர்
திரு. R. திரவியசிங்
திருமதி. D. ஜாய் டேவிட்சன்
திருமதி. உஷா கல்பனா
திருமதி. J. செலின்
திரு. G. அருள்ராஜ் டேனியல்
திருமதி. S. மெர்சி
செல்வி. S. ஸ்டனிஷா
செல்வன். சாமுவேல் ஜெபராஜ்
திருமதி. D. ஜெய சங்கீதா
திருமதி. J. அன்பு
செல்வி. G. கிருபாவதி

**மார்ச் 4**

செல்வி. C. சன்க்ட்ரா பிலோ
திருமதி. S. ஜெகதா
செல்வி. R. ஜெரில் வின்னோனா
திருமதி. P. ரத்தினமணி
திருமதி. C. மேரி சரோஜினி
திரு. J. ஜேக்சன்
திருமதி. S. அருள்ராஜம்
செல்வி. J. ஷெகீனா பிரதீபா
திரு. S. தர்மலிங்கம்
திருமதி. A. ஜெயந்தி
திருமதி. ரூபா ஸ்டெல்லா
திருமதி. ராணி
திரு. ஷியாம் சுந்தர்
செல்வன். J. ஜோசுவா தேவதாசன்
திருமதி. S. தங்கஜோதி
செல்வன். G. ஆரோன் ஜெரிஷ்

**மார்ச் 5**

திருமதி. H. வனிதா
திரு. J.K. எப்ராயீம் பேட்ரிக்
திருமதி. K. மெர்ஸி ஜாய்
திரு. M. ஜாண்
செல்வி. லிடியா இசபெல்லா
திருமதி. S. கிறிஸ்டி
செல்வன். ஹேனியல் ரிஜோன் சேகர்
செல்வி. A. ஏஞ்சல்
திரு. J. சாமுவேல்ராஜ்
திருமதி. G. ஜெயராணி ரமா துரை
செல்வன். S. இன்பமுகில் அரசன்
திரு. J. சாமுவேல்
செல்வன். S. இனியன் சைமன்
செல்வன். J. தீபக்



**மார்ச் 6**

திரு. MGJ. ஞானசிகாமணி ஆபிரகாம்
திரு. T.D. ஜோன்ஸ்
செல்வி. J. அக்னஸ்
செல்வன். J. டெல்வின் ஜோன்ஸ்
திரு. S. தாமரை செல்வன்
திரு. P. ஜெபராஜ்
திரு. C. ராஜ்குமார்

**மார்ச் 7**

திரு. S. பென்சிங்
திருமதி. R. ஹேமா ராஜ்வின்
திரு.K. மோசஸ் ஜவஹர்
திருமதி. S. மேரி ஸ்டெல்லா ஏஞ்சலின்
டாக்டர். தயாநிதி மோகன்தாஸ்
செல்வன். G. டேவிட் மனோராஜ்
செல்வி. A. எட்வினா
திரு. ஜோசப்
திரு. P. அருள்சாமி
செல்வி. R. ஷெரின்
திருமதி. Dr.J. ஜால்சி தினகரன் ஜெயசிங்

**மார்ச் 8**

திரு. A. ஜெயராஜ்
செல்வி. E. பிரியதர்ஷினி
திரு. R. ஜீவ தேவ் ஆனந்த்
திரு. K. பாக்யராஜ்
செல்வி. J. ஸ்வீட்டி
திருமதி. ஜேஸ்மின் ஆஸ்லி
திரு. G. ஜசன்பாபு
செல்வன். J. ஆபிரகாம்
செல்வன். V. ஃபிராங்ளின்
செல்வி. A. ஏமி அர்பனா
செல்வன். C. தயானந்த்
செல்வி. R. பிளோரினா

**மார்ச் 9**

திரு. J. ஜெர்வின் சாமவேல்
திருமதி. J. சாந்தி ஜேக்கப்
பேபி. P. ஜெப்ஃரி சாமுவேல்
திரு. T. அருணன்
திருமதி. லிடியா சுந்தர்
திரு. W. பாக்கியன் டேவிட் துரை
திரு. P. இஸ்ரவேல் ராஜ்குமார்
திருமதி. P. சாந்தி
செல்வன். G. ரூபன் மனோஜ்
திரு. S. பிரேட்ரிக் நேசகுமார்
திரு. J. சல்வாஸ்

**மார்ச் 10**

திருமதி. S. பிந்து சாம் ராஜசிங்
செல்வன். S. ஜேஸ்பர்
திருமதி. பெர்ஸி சோபியா
திரு. C. செல்வராஜ்
செல்வன். S. ஜேஸ்பர்
திருமதி. M. ஞான சற்குணம்
J. டேவிட் ஜோகன்
செல்வி. J. ஆனந்தி திவ்ய ஷோபனா
திருமதி. S. ஜெயா

**மார்ச் 11**

திரு. A. செல்வராஜ்
திருமதி. கலா தியோடர்
திருமதி. R. ரோஸ்லின் பியூலா
திருமதி. P. அனிதா
செல்வன். T. சுதாகர்
திரு. P. அஜிஸ் ஞான ஜெபின்
திருமதி. R. மகா ரெஜினா
பேபி. A. ஏமி மைக்லின் கேரன்
செல்வன். ஜோஷ்வா
செல்வன். R. ராஜ்குமார் டாமின் பால்
செல்வன். S. ஜேசன் நத்தானியேல்
செல்வி. R. சாரா
திரு. ராஜேஷ் கிருபாகரன்

**மார்ச் 12**

செல்வி. S. ஷேரன் ஜூலியட்
திருமதி. புஷ்பாராணி
திருமதி. T. ரோசாலி
செல்வி. I. இவாஞ்சலின்
திருமதி. I. அன்பு ராஜம்மாள்
திருமதி. ஜெயஸ்ரீ விஜேஷ்

செல்வன். P. ஐசக் டார்வின் டேவிட்
செல்வன். J. அருண் ஜெபர்சன்
திரு. R. எட்வின் சாமுவேல்
திரு. A. ஜான்சன்
செல்வி. J. மெலித்தா பிரின்சஸ்
திருமதி. J. ஜெமினா
திருமதி. கஸ்தூரி
திரு. S. விஜில் குமார் கோயில்ராஜ்

**மார்ச் 13**

திருமதி. S. ராணி
திருமதி. ஸ்டாரினா கிருபைவரம்
திரு. அன்பரசன்
திருமதி. D. டெய்ஸி ஸ்டெல்லா
திருமதி. P. பட்டுராணி
செல்வி. N. சண்ட்ரா ஹெப்சிபாய்
திருமதி. R. டெய்ஸி ராஜ்குமார்
செல்வி. J. கிருபா சௌந்தரியா
செல்வன். J.S. எபி ஜெரோன்
செல்வி. A. ரியானா எலன்
திருமதி. A. இந்திரா
திருமதி. D. எஸ்தர் ருக்மணி
செல்வன். A. அட்கின்ஸ்
செல்வி. V. அனு தேவதர்ஷினி
திருமதி. மார்க்கிரெட் ரஞ்சிதம்

**மார்ச் 14**

செல்வி. R. இனியா
திருமதி. T. மெர்சி மெட்டில்டா
திரு. C. டென்னிஸ்
திருமதி. N. பாப்பி மார்ஷலின்
செல்வன். V. ரவிகுமார்
திரு. J. பிரின்ஸ் டைட்டஸ்
திரு. J. செல்வராஜ்
செல்வி. D. கிரேஸ்லின் கோல்டா
திரு. M. ரிச்சர்ட் காலின்ஸ்
திருமதி. S. மார்செலின்
செல்வன். V. சஞ்சய் சவின்

**மார்ச் 15**

திருமதி. ஜாய் சாமுவேல்
திரு. K. சாமுவேல் ஆசீர்வாதம்
செல்வன். N. அகஸ்டின் இம்மானுவேல்
திருமதி. ஜெனிட்டா
திருமதி. D. சாரா வினோலின்
திருமதி. அன்பு ஹேனா
செல்வி. E. ஜோகனா
செல்வி. J. ஷெர்லி ரெபேக்கா
திருமதி. B. ஜெயா
திருமதி. விஜயா
திருமதி. E. வசந்தி
திரு. S. அகஸ்டின்
திரு. K. ஜஸ்பர் மில்டன் மகாராஜா
செல்வன். M. சாம் ஜேசுதாஸ்
திருமதி. M. அன்னாள் கிரேஸ்
திருமதி. A. வாசுகி
செல்வி. S. ஜெவினா

**மார்ச் 16**

செல்வன் J. ராபின்சன்
திருமதி. சொர்ணம்
திரு. D. பிளஸ்ஸிங் டேனியல்
திரு. K. ஜாண் இஸ்ரவேல்
திருமதி. V. தங்கரத்தினம் பவிதா
திரு. P. அசரியா ஜெயகுமார்
திரு. ஜோசுவா பொன்ராஜ்
திரு. D. ஜெயகுமார்
திருமதி. பென்சியா டேனியல்
திருமதி. M. எபநேசர் சாந்தகுமாரி
செல்வன். E. எஸ்றா செல்வின்துரை
திருமதி. T. மெர்ஸி ஹெப்சிபா ஜென்ஸி
செல்வி. J. ஜெஃபி
செல்வன். ஜேடன் ஜெர்மியா
திருமதி. M. மீனா
திரு. M. ஜெபசிங் ராஜ்குமார்

**மார்ச் 17**

திருமதி. லில்லி பாலின்
திரு. P. வின்பிரட் ஜோஷ்வா
திருமதி. பெர்ஸியா மேரி தங்கம்
திரு. T. மரிய செல்வம்



திருமதி. A. செல்வ அமுதா
திரு. K. தேவயிரக்கம்
திரு. R. லூக் தனராஜ்
திருமதி. T. பொன்னு விமலா
செல்வன். P. அன்பு விக்டர்
திருமதி. J. இந்திராகாந்தி
திருமதி. அனிதா
திரு. J. பென்னி
திரு. J.K. அருள்ராஜ்
திரு. T. செல்வகுமார்
திருமதி. W. கிறிஸ்டினா
A. மணிராஜ் டேனியல்
A. எப்சி பியூலா

**மார்ச் 18**

திரு. J. ஜெயபால்
செல்வன். J. ஜெஸ்வின்
செல்வி. ரூபினா அனி சாந்தா
திருமதி. D. ஷைனி விஜய்
திரு. J. ரஜித் ஞானசிகாமணி
திருமதி. A. மரிய ராஜம்மாள்
திருமதி. S. ஜெயின் செல்வராஜ்
திருமதி. S. ஜடா
திருமதி. A. மெர்லின் ஜாய் பெல்சி
திருமதி. R. யாமினி நிவேதா
திரு. G. ஜேசன்
செல்வி. K. பெர்ஸி
திருமதி. S. அருணா
திருமதி. S. மேரி சந்திரா
செல்வன். P. ராம்குமார்
செல்வி. S. மரிய ஷீலா

**மார்ச் 19**

திருமதி. J. அனி
திருமதி. S. ஜோதி
செல்வன். T. மனோஜ்
திருமதி. D. சுதா தனராணி
திருமதி. K. செல்வம்
திரு. தனசேகர்
செல்வன். J. ஜோன்ஸ்
செல்வன். S. சதீஷ் சாமுவேல்
திருமதி. J. ஹெப்ஸிபா ஷைனி
திரு. P. அபிஷேக் சாம்
செல்வன். E. ஜோயல் தங்கராணி
செல்வன். A. நித்தீஷ் ரோஷன்
திருமதி. S. முருகேஸ்வரி

**மார்ச் 20**

திருமதி. I. பாத்திமா ராணி
திருமதி. K. அலீஸ் அன்பு
செல்வன். K. ஜெரேமியா இம்மானுவேல்
திருமதி. R. ஸ்டெஃபி ஹெலினா மேரி
திருமதி. அனிட்டா
திரு. D. ஜெபராஜ்
திருமதி. J. சாந்தகுமாரி
திருமதி. S. அன்ஸி
திரு. S. ஜெபராஜ்
செல்வி. ஜோஸ்பின்

**மார்ச் 21**

செல்வன். பிரகாஷ் பால்
திருமதி. ஜாய் செல்லக்கனி
திரு. K.T. வெஸ்லி
திருமதி. ஹெலன் ஜாண்சன்
செல்வன். T. அசோக் நேசராஜ் கோயில்மணி
செல்வன். J. ராஜேஷ்
திருமதி. A. பெர்ஸியாள்
திருமதி. J. ஷெர்லி நிஜா

**மார்ச் 22**

திருமதி. G. சுவிதா
செல்வி. S.K. சுஜினா
திருமதி. C. மாலினி
திரு. S. தீபக் காட்சன்
திருமதி. விமலா
திரு. S. ஸ்டீபன் சாமுவேல்
திருமதி. S. ஜோதிமணி
செல்வன். X. ஜேசன் பிலிப்

செல்வி. நேகா ஷேரன்
Dr.V. ஜேம்ஸ் சுந்தர்சிங்

**மார்ச் 23**

திருமதி. அசோக பொன்ராஜ்
திருமதி. X. ராஜாத்தி
செல்வன். N. ஜெப்ரி எடி மோசஸ்
திருமதி. சாந்தி ஜாண்
திருமதி. மனோரா ஜாய்
செல்வன். T. பிரைட் தினகரன்
செல்வி. D. ஜீவரத்தினம் சஞ்சஸ்
செல்வன். சாம் விஷால்
செல்வி. அஷ்லி
திரு. J. ஜெரோன்ராஜ்
திருமதி. எஸ்தர் திலகவதி
திருமதி. Dr. பிரேமா பாலசந்திரன்
செல்வன். J. மோசஸ்
திருமதி. J. வேதவள்ளி சாராள்
செல்வன். J. ராபின்டல்

**மார்ச் 24**

செல்வி. V. ஜெனிசா ஸ்மைலி
திருமதி. பிரியா எஸ்தர்
திருமதி. K. சோஃபியா
மாஸ்டர் R. ரெய்ன் அத்விக்
செல்வன். R. அபிஷேக்
மாஸ்டர் J. சாம் இஸ்ரவேல் அருள்
செல்வி. R. ஹெலன் ஷீபா
திருமதி. D. மாலதி
திருமதி. J. ஜெஸி ஜெயபால்
திருமதி. ஜேனட் பிரபாகர்

**மார்ச் 25**

செல்வி. M. மாரி செல்வி
செல்வன். S. ஆதிரன்
திரு. M. ஆல்வின்
திருமதி. J. மெர்ஸி கிரேஸ் மேரி
திரு. P. ஞான அண்டோ கேத்ரின்
திருமதி. M. வைஜோ பிரேமா
திருமதி. J. ஜேக்குலின் ஜேசன்
திரு. A. ரமேஷ் சேவியர் ஜெபசெலவன்
செல்வன். G. ஜோகன் ஆபிரகாம்
செல்வி. J.K. கவின் விருதிகா
திருமதி. T. ராணி
திரு. R. ராஜமுத்து
திரு. EPR. செல்வராஜ்
செல்வன். D. அஸ்வின் சாமுவேல் ராபி
திருமதி. T. சுசீலா
செல்வி. J. செல்வ ஜேஸ்மின்

**மார்ச் 26**

திருமதி. மஞ்சுளா தேவி
திரு. மனோகர் செல்லப்பா
திரு. E. பிரவீன் சார்லஸ்
திருமதி. R. யுனிஸ்
செல்வி. G. ஏஞ்சல் சலிசா
செல்வி. R. ஈவா செர்லின்
திரு. J. ரிச்சர்ட்சன்
திருமதி. P. சுகந்தி
திருமதி. S. விஜயால் சித்தர்சிங்
திருமதி. A. கிரேஸ்
திருமதி. P. பேபி ஸ்டெல்லா
திருமதி. J. டிஸ்னி
செல்வன். ஜோயல் வின்பிரட் கிப்சன்

**மார்ச் 27**

திருமதி. R. எஸ்தர் ஞான சௌந்தர்யா
திரு. P. ராஜா
செல்வி. ஷேரன் எஸ்தர்
செல்வன். அனிஷ்டன்
செல்வன். Dr.M. அபிஷேக் பிரின்ஸ்
திரு. C.P. கிறிஸ்பானோஸ் பெயித்ராஜ்
திரு. M. ஜேக்கப் ஜனகர்ராஜ்
திருமதி. A.R. ராஜம்மாள்
திருமதி. M. சுகந்தி கமலாபாய்
திரு. T. ஜெயசிங் ராஜா
செல்வி. D. டிவைனி பெட்ரிசியா
செல்வி. P. ராணி கெத்ஸியாள்
திருமதி. உஷா
செல்வன். R. ரோஹித் தயாளன்



**மார்ச் 28**

திருமதி. சாந்தி
செல்வன். A. டனி
திருமதி. பியூலா தனபாக்கியம்
செல்வி. S. ஜெபா மேக்ரினா
திரு. J. டேனியல்
செல்வி. A. அண்டிரியா மார்க்ரெட்
செல்வி. S. பெயித் சோபியா
திரு. D. சாம் விக்டர்
செல்வி. H. பெனிட்டா

**மார்ச் 29**

திருமதி. V. ஜேஸ்லின் ட்ரேஷியா
செல்வன். R. ரீயூ
செல்வி. R. யவ்வனா
திரு. மார்வின் சாமுவேல்
திரு. T. சார்லஸ் ரத்தினசேகர்
திரு. A. ஸ்டீபன் ஏசுராஜா
செல்வன். S. சாம்சன் டேனியல்
திரு. G. விஜயகுமார்
திருமதி. V. பேன்ஸி செல்வராணி
செல்வன். M. நிவிஸ்
திரு.G.J. தியாகராஜன்

**மார்ச் 30**

திருமதி. S. தங்க விஜயா
செல்வி. V. கிஃப்டி ஜஸ்வானா
திருமதி. ரீட்டா ஈஸ்டர் ராணி
திருமதி. J. சுதா ஃபெலிக்ஸ்
திருமதி. V. ஜோதி
செல்வி. E. அஸ்ரிகா செல்வராணி

**மார்ச் 31**

திரு. A. ஜார்ஜ் சுதாகர்
திரு. ஜெயபாலன்
திரு. A. ராபின்சன் தனராஜ்
திருமதி. S.B. ஜோஸப்பின்
செல்வன். ஜெய்டென்
திருமதி. ஓலீன்
திரு. K. ராஜகுமார்
திரு. அனியன் ரீகன் பெல்
திருமதி. A. ஜெபசீலி ஹேமலதா
திருமதி. ரஞ்சிதம்
Rev. S.J. சுந்தர்சிங்
திரு. T. ரத்தின ராஜன்
செல்வி. S. ஜெமிமா ஜெப தங்கம்
திருமதி. லீமா
திரு. R. மேபல் சொர்ணா

*கர்த்தர் உங்களை நீடித்த நாட்களாக திருப்தியாக்குவாராக.*
*உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்*

## திருமண நாளை ஆசரிப்பவர்கள்

| | |
|---|---|
| மார்ச் 2 | Mr. அஜோமோன் ஜோஸ் & Mrs. M. மாயா |
| மார்ச் 8 | Mr. ஜோசப் & Mrs. ஞானபாய் |
| மார்ச் 16 | Mr. G. சுவாமிநாதன் & Mrs. ஜெயக்கொடி |
| மார்ச் 26 | Mr. R. முரளிதரன் & Mrs. M. கௌசல்யா |
| மார்ச் 30 | Mr. E. ஸ்டீபன் கொம்பையா & Mrs. S. சிமி |

பிறந்த நாள், திருமண நாள் ஆசரிப்போரை கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அன்றைய தேதிகளில் காலை 5.30 மணி ஆராதனைகளில் உங்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது. அனைவரும் கலந்து கொண்டு ஆண்டவரின் நிறைவான ஆசீர்வாதத்தை பெறுவீர்களாக.

# லெந்துகால கூட்டங்கள் 2023

| | | |
|---|---|---|
| 1.3.23 | காலை 5.00 மணி | **வாக்குத்தத்த திருவிருந்து ஆராதனை** |
| புதன் | மாலை6.30 மணி | **குணமளிக்கும் ஆராதனை** |
| 2.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| வியாழன் | | *தலைப்பு* : **சமாதானம் பண்ணுதல்** |
| | | **மத் 5:9 (Iகொரி 9:16-27)** |
| | மாலை 6.30 மணி | **லித்தானியா ஆராதனை** |
| 3.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| வெள்ளி | | *தலைப்பு* : **நீதியின் நிமித்தம் துன்பத்தை அனுபவித்தல்** |
| | | **மத் 5:10 (வெளி 7:9-17)** |
| | மதியம் 12.00 மணி | **மன்றாட்டு ஜெபம்** |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு* : **உபவாசத்தால் பரலோக நன்மை – யோசபாத் (2 நாளா 20:3)** |
| 4.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| சனி | | *தலைப்பு* : **பூமிக்கு உப்பாயிருத்தல்** |
| | | **மத் 5:13 (யோவான் 3:22-36)** |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்** |
| | | *செய்தி* : **அருள்திரு. டேவிட்,** கோயம்புத்தூர் |
| 5.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| ஞாயிறு | | *தலைப்பு* : **மன்னிக்கும் கிறிஸ்து** |
| | | **(சங் 25:11)** |
| | காலை 7.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 9.00 மணி | காலை ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்** |
| | | *செய்தி* : **அருள்திரு. டேவிட்,** கோயம்புத்தூர் |
| 6.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| திங்கள் | | *தலைப்பு* : **உலகத்திற்கு வெளிச்சமாயிருத்தல்** |
| | | **மத் 5:14 (யோவான் 12:35-50)** |
| | மாலை 6.30 மணி | **ஜெப ஆராதனை** |



| | | |
|---|---|---|
| 7.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| செவ்வாய் | | *தலைப்பு* : **உயர்ந்த நீதியுள்ளவர்களாயிருத்தல்** |
| | | **மத் 5:20 (மத் 23:1-39)** |
| | மாலை 6.30 மணி | **வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 8.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| புதன் | | *தலைப்பு* : **வீண் கோபம் கொள்ளாதிருத்தல்** |
| | | **மத் 5:22 (ஆதி 4:1-16)** |
| | மாலை 6.30 மணி | **குணமளிக்கும் ஆராதனை** |
| 9.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| வியாழன் | | *தலைப்பு* : **ஒப்புரவாகுதல்** |
| | | **மத் 5:24 (ஆதி 33:1-15, மத் 5:23-26)** |
| | மாலை 6.30 மணி | **லித்தானியா ஆராதனை** |
| 10.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| வெள்ளி | | *தலைப்பு* : **இச்சையடக்கமுள்ளவர்களாயிருத்தல்** |
| | | **மத் 5:29,30 (Iகொரி 9:24-27)** |
| | மதியம் 12.00 மணி | **மன்றாட்டு ஜெபம்** |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு* : **உபவாசத்தால் பரலோக நன்மை – தானியேல் (தானி 9:3)** |
| 11.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| சனி | | *தலைப்பு* : **பரிசுத்தமான குடும்ப வாழ்க்கை** |
| | | **மத் 5:32 (மாற்கு 10:1-10)** |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்** |
| | | *செய்தி* : **அருள்திரு. குணகுமார்,** சென்னை |
| 12.3.23 | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| ஞாயிறு | | *தலைப்பு* : **ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து** |
| | | **ஓசியா 2:19(பி)** |
| | காலை 7.00 மணி | காலை ஆராதனை |
| | காலை 9.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்** |
| | | *செய்தி* : **அருள்திரு. குணகுமார்,** சென்னை |

| | | |
|---|---|---|
| 13.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* வாக்கு பிறழாமை<br>மத் 5:37 (நீதி 12:22)<br>**ஜெப ஆராதனை** |
| 14.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* தீமையை நன்மையினால் வெல்லுதல்<br>மத் 5:39 (ஆதி 50:15-21)<br>**வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 15.3.23<br>புதன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* இரண்டு மைல் தூரம் செல்லுதல்<br>மத் 5:39 (லூக்கா 19:1-10)<br>**குணமளிக்கும் ஆராதனை** |
| 16.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* உற்சாகமாக கொடுத்தல்<br>மத் 5:42 (2கொரி 9:1-12)<br>லித்தானியா ஆராதனை |
| 17.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி<br><br><br><br><br>மதியம் 12.00 மணி<br>மாலை 6.30 மணி | **தூய பேட்ரிக்ஸ் தினம்**<br>திருவிருந்து ஆராதனை<br>**Rev. J. இஸ்ரவேல் ஞானராஜ் B.Sc.,B.D.,**<br>(சேகர தலைவர், நாகலாபுரம்)<br>(காலை உணவு வழங்கப்படும்)<br>**மன்றாட்டு ஜெபம்**<br>திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* உபவாசத்தால் பரலோக நன்மை –<br>இயேசு (மத் 4:2) |
| 18.3.23<br>சனி | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* பூரண சற்குணராயிருத்தல்<br>மத் 5:48 (மத்தேயு 5:43-48)<br>**லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* **சகோ. ராஜன்** I.R.S., சென்னை |
| 19.3.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* விடுவிக்கும் கிறிஸ்து<br>(யாத் 3:8) |



| | | |
|---|---|---|
| | காலை 7.00 மணி<br>காலை 9.00 மணி<br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>காலை ஆராதனை<br>**லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* **சகோ. ராஜன்** I.R.S., சென்னை |
| 20.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* உயரிய நோக்குடன் தானதர்மம் செய்தல்<br>மத் 6:1 (மத் 6:1-4)<br>**ஜெப ஆராதனை** |
| 21.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* மாய்மாலமற்ற ஜெபம் செய்தல்<br>மத் 6:6 (மத் 5:5-8)<br>**வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 22.3.23<br>புதன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* கர்த்தர் கற்பித்தபடி ஜெபித்தல்<br>மத் 6:9-13 (மத் 7:7-11)<br>**குணமளிக்கும் ஆராதனை** |
| 23.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* மாய்மாலமற்ற உபவாசம் செய்தல்<br>மத் 6:17 (மத் 4:2)<br>**லித்தானியா ஆராதனை** |
| 24.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி<br><br><br>மதியம் 12.00 மணி<br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* விண்ணுலகில் செல்வத்தை சேமித்தல்<br>மத் 6:20 (மத்தேயு 6:19-21)<br>**மன்றாட்டு ஜெபம்**<br>திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* உபவாசத்தால் பரலோக நன்மை –<br>கொர்நேலியு (அப் 10:30) |
| 25.3.23<br>சனி | காலை 5.30 மணி<br><br>மாலை 6.30 மணி | **புனித மரியாள் மங்கள வாக்குத் திருநாள்**<br>திருவிருந்து ஆராதனை<br>**லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* சகோதரி. **சகுந்தலா அசரியா**<br>ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 26.3.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* அடிமைத்தன அமைப்பை மறுவுருவாக்குதல்<br>(எபே 2:7) |
| | காலை 7.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 9.00 மணி | காலை ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* சகோதரி. **சகுந்தலா அசரியா**<br>ஆலங்குளம் |
| 27.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* ஆவிக்குரிய தெளிவான பார்வையுடையவர்களாய் இருத்தல்<br>மத் 6:22 (மத் 6:22-27) |
| | மாலை 6.30 மணி | **ஜெப ஆராதனை** |
| 28.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* கர்த்தருக்கே உண்மையாய் ஊழியம் செய்தல்<br>மத் 6:24 (யோவா 21:15-21) |
| | மாலை 6.30 மணி | **வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 29.3.23<br>புதன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* வீண் கவலை கொள்ளாதிருத்தல் - I<br>வீண் கவலையினால் உண்டாகும் தீமைகள்<br>மத் 6:31-32 (மத் 6:25-34) |
| | மாலை 6.30 மணி | **குணமளிக்கும் ஆராதனை** |
| 30.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* வீண் கவலை கொள்ளாதிருத்தல் - II<br>வீண் கவலைப்படுகிறோம்<br>மத் 6:31-32 (மத் 6:25,34) |
| | மாலை 6.30 மணி | **லித்தானியா ஆராதனை** |
| 31.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* தேவனுக்குரியவைகளுக்கு முதலிடம் கொடுத்தல்<br>மத் 6:33 (ஆதி 6:1-7) |
| | மதியம் 12.00 மணி | மன்றாட்டு ஜெபம் |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* உபவாசத்தால் பரலோக நன்மை – பவுல் (2 கொரி 6:5) |



| | | |
|---|---|---|
| 1.4.23<br>சனி | காலை 5.00 மணி | வாக்குத்தத்த திருவிருந்து ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* சகோ. **K. பட்டுராஜ் செல்வன்**<br>தூத்துக்குடி |
| 2.4.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* கிறிஸ்து சமாதான ராஜா<br>(சங் 24:7) |
| | காலை 7.00 மணி | காலை ஆராதனை |
| | காலை 9.00 மணி | **குருத்தோலை பவனி** |
| | காலை 9.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* சகோ. **K. பட்டுராஜ் செல்வன்**<br>தூத்துக்குடி |
| 3.4.23<br>திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* அத்திமரத்தை சபித்தல்<br>தேவாலயத்தை சுத்திகரித்தல்<br>(மத் 21:12-22) |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்**<br>*செய்தி :*<br>சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்**<br>அந்தமான் |
| 4.4.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* கேள்வி நாள்<br>(மத் 21:23-46) |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்**<br>*செய்தி :*<br>சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்**<br>அந்தமான் |
| 5.4.23<br>புதன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* தைலாபிஷேக நாள்<br>(மாற் 14:1-11) |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்**<br>*செய்தி :*<br>சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்**<br>அந்தமான் |

| | | |
|---|---|---|
| 6.4.23<br>**கட்டளை வியாழன்** | காலை 5.30 மணி<br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை – **கட்டளை வியாழன்**<br>திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **கிறிஸ்து : வாழ்வு தரும் அப்பம் (1 கொரி 11:24)** |
| 7.4.23<br>**புனித வெள்ளி** | காலை 5.30 மணி<br>காலை 11.30 மணி | திருவிருந்து ஆராதனை (முன்பாகம்)<br>**மும்மணி தியான ஆராதனை**<br>(சுய வெறுப்பு உண்டியல் படைக்கவும்) |
| 8.4.23<br>சனி | காலை 5.30 மணி<br>காலை 8.00 மணி | காலை ஆராதனை<br>**ஏழை எளியோருக்கு அரிசி வழங்குதல்** |
| 9.4.23<br>**ஞாயிறு** | அதிகாலை 3.00 மணி<br><br><br><br>காலை 9.00 மணி<br>காலை 11.00 மணி<br>மாலை 6.30 மணி | **கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகை & திருவிருந்து ஆராதனை**<br>*தலைப்பு* : **உயிர்த்தெழுந்த இயேசுவுக்குள் வாழ்வை கொண்டாடுதல் (1 கொரி 15:52)**<br>திருவிருந்து ஆராதனை<br>**ஞானஸ்நான ஆராதனை**<br>**இன்னிசை நிகழ்ச்சி**<br>சகோ. **J. ஜெகத் ரட்சகர் இன்னிசை குழு,** சண்முகபுரம் |

**சபையார் அனைவரும்**

**நமது தூய பேட்ரிக் இணைபேராலயத்தில் நடைபெறும்**

**அனைத்து நிகழ்ச்சிகளையும்**

**தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கவும்,**

**தாங்கள் குடும்பத்துடன் பங்குபெற்று**

**தேவஆசீர்வாதம் பெற்று செல்லும்படி**

**அன்புடன் அழைக்கிறோம்.**

**திரு. K. எபனேசர் சாம்**
**திரு. D. செல்வராஜ்**
சபை ஊழியர்கள்

**Rev. M. காலேப் மேன்சிங்**
**Rev. R.A.J. செல்வின் துரை**
திருப்பணிவிடையாளர்கள்



*மறக்க முடியாத மாமனிதர்கள்*

# சா.தி.ஈ. ரேனியஸ்

*(C.T.E. Rhenius)*

(கி.பி. 1790 – 1838)

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், கிறிஸ்தவச் சமயம் திருநெல்வேலி மாவட்டத்தில் பரவுவதற்காக அநேக மேனாட்டு மிஷனெரிகள் ஊக்கமாய் உழைத்தார்கள். அவர்களுள் சா.தி.ஈ. ரேனியஸ் முக்கியமானவராவார். மேனாட்டு மக்கள் சென்றிராத குக்கிராமங் களுக்கும் இவர் சென்று, அம்மக்களுடன் நெருங்கி பழகி, சிறந்த சுவிசேஷ ஊழியம் செய்து அநேக கிறிஸ்தவச் சபைகளைத் தோற்றுவித்தார். இவர் இவ்வாறு அம்மாவட்டத்தில் உழைத்த காரணத்தால், "திருநெல்வேலி அப்போஸ்தலன்" என்று அழைக்கப்பட்டார்.

**ரேனியஸ் ஐயரின் பிறப்பும், ஆரம்ப கால ஊழியமும் :–**

C.T.E. ரேனியஸ் 1790ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் தேதி ஜெர்மானிய நாட்டில், கிரான்ஸ் கோட்டையில் பிறந்தார். இவருடைய தந்தை ஆதோ ரேனியஸ் என்பார், ராணுவத்தில் பணியாற்றினார். இவருக்கு ஒரு மூத்த சகோதரனும், ஒரு தம்பியும், ஒரு தங்கையுமிருந்தார் கள். 1799ஆம் ஆண்டில், இவர்கள் சிறுவர்களாயிருக்கும்போதே தங்கள் தந்தையை இழந்தார்கள். பதினாறாம் வயது முதல் W.A. ரேனியஸ் என்ற பெயரையுடைய அவருடைய பெரிய தகப்பனாரின் இல்லத்தில் இவர் வாழ்ந்தார். இப்பெரியார் கடவுளிடம் மட்டில்லா அன்பு கொண்டவர். எனவே, அவர் இல்லத்தில் ரேனியஸ் சிறந்த பக்தி நெறியில் வளர்க்கப்பட்டார்.

C.T.E. ரேனியஸ் தம் பெரிய தகப்பனாருடன் வாழ்ந்த பொழுது தம்மை பின்பற்றி வரவும், அவருடைய அருள் நெறியை மக்களுக்கு எடுத்துரைக்கவும், ஆண்டவர் தம்மை அழைப்பதை உணர்ந்தார். அப்பொழுது வெளிநாடுகளில் மிஷனெரிகளாக உழைத்து வந்த

மொரோவிய திருச்சபையின் மக்கள் அனுப்பிய அறிக்கைகளும், தென்னிந்தியாவில் தரங்கம்பாடி மிஷனெரிகள் அனுப்பியிருந்த அறிக்கைகளும் அவர் கையில் கிடைத்தன. அவைகளை வாசித்தப்பின், தான் தென்னிந்தியாவில் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்.

சுவிசேஷப்பணி செய்வதற்குத் திருமறை பயிற்சி அவசியமென்பதை உணர்ந்து பெர்லின் பட்டணத்தில் நிறுவப்பட்டிருந்த கலாசாலையில் சேர்ந்தார். இதன் பின்பே இவர் தாயாருக்கு தம் எண்ணத்தைத் தெரிவித்தார். இதை அறிந்த உடனே அவர்கள் மிகவும் கலக்கமுற்று, அயல் நாடுகளுக்கு எந்த பணியும் செய்வதற்குப் போக வேண்டாமென்று தடுத்தார்கள். தனது தாயின் மனச்சஞ்சலமும், அவ்வூழியம் செய்ய தாம் தகுதியுள்ளவனா என்ற சந்தேகமும் அவர் மனதை வாட்டின. இவைகளைக் குறித்து ஆண்டவரிடம் ஊக்கமாய் ஜெபித்தார். ஒரு ஆண்டு பெர்லின் திருமறை பயிற்சி சாலையில் பயின்ற பின், 1812ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிரஷியா தேச திருச்சபை (லுத்தரன்) குருவாக பெர்லின் நகரில் அபிஷேகம் பண்ணப்பட்டார். இங்கிலாந்திலுள்ள சர்ச் மிஷனெரி சங்கத்தார் இவரையும், டென்மார்க்கைச் சேர்ந்த ஷனார் என்ற ஒரு வாலிப குருவையும், தங்கள் மிஷனெரிகளாகத் தென்னிந்தியாவில் ஊழியம் செய்வதற்குத் தெரிந்து கொண்டார்கள். மிக மகிழ்ச்சியுடன் தம் தாயிடம் விடை பெற்றுக்கொண்டு, ஷனார் குருவையும் அழைத்துக் கொண்டு, 1814ம் ஆண்டு ஜனவரி மாதம் ஏழாம் தேதி சென்னைக்கு செல்லும் மரக்கலம் ஒன்றில் புறப்பட்டார்.

சென்னைக்கு வந்தவுடன் கருப்புடவுனில் (ஜார்ஜ் டவுனில்) ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து ஜெபக்கூட்டங்கள் நடத்தி தெருப்பிரசங்கங்கள் செய்து இவ்விருவரும் தங்கள் ஊழியத்தை ஆரம்பித்தார்கள். ராயபுரத்தில் ராட்லர் செய்து வந்த பணியிலும் பங்கெடுத்து, அவர் நடத்தி வந்த கூட்டங்களுக்கும் சென்று வந்தார்கள். சிறுவர்களுக்கு வேத அறிவு புகட்டினால் அதனால் பயனுண்டாகும் என்று கருதி ரேனியஸ் ஒரு சிறு பள்ளிக்கூடம் ஆரம்பித்தார். வேலையில்லாத ஏழை கிறிஸ்தவ மக்களுக்கு ஏதாவது வேலையைக் கொடுத்து அவர்கள் வறுமையைத் தீர்த்தார். ராட்லர் தமது



வயது முதிர்ந்த காலத்தில் வேதாகம மொழி பெயர்ப்பில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு, வேதாகம மொழி பெயர்ப்பின் அவசியத்தை உணர்ந்து தாமும் சில பகுதிகளை மொழி பெயர்க்க ஆரம்பித்தார். ரேனியஸ் தம் வாழ்நாள் இறுதிவரை இப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

### ரேனியஸ் ஐயரின் திருமணமும், பெண்கள் மத்தியில் ஊழியமும் :-

1816ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் தேதி அனிவான் சோமான் என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

1771ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சுவிசேஷ ஊழியம், முதல் இந்திய குருவானவராகிய சத்திய நாதனின் சிறந்த ஊழியத்தினாலும், ஜெனிக்கே, ராட்லர், கெரிக் முதலான மிஷனெரிகளின் உழைப்பினாலும் பலன் தந்து பல இடங்களில் கிறிஸ்தவ சபைகள் தோன்றியிருந்தன.

ரேனியஸ் 1820ஆம் ஆண்டில் பாளையங்கோட்டையிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் தொண்டாற்றுவதற்கு அனுப்பப்பட்டார். முதலில் ரேனியஸ் பாளையங்கோட்டையில் கோட்டைக்குள் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து அதில் தம் மனைவி மக்களுடன் தங்கினார்.

இந்திய கிறிஸ்தவ மக்கள், கல்வி அறிவு இல்லாதவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் மெய்யடியார்களாக அவர்கள் விளங்க முடியாதென்பது ரேனியஸின் கருத்து. எனவே பற்பல இடங்களில் பள்ளிக்கூடங்களை நிறுவினார். முதன்முதலாக, வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். அதன்பின், திருநெல்வேலிக்கு அருகிலுள்ள பேட்டை, மேலப்பாளையம், குறிச்சி, தச்சநல்லூர், முருகன் குறிச்சி கிராமங்களிலும், கான்சாபுரம், முறப்பாடு, மேல்பாட்டம் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்களை நிறுவினார்.

பெண்களும் முன்னேற்றமடைந்து, சுவிசேஷ ஊழியத்தில் பங்கு பெறுவது அவசியமென்று ரேனியஸ் கருதினார். எனவே 1823ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாளையங்கோட்டையில் ஒரு பெண்கள்

பாடசாலையை ஆரம்பித்தார். துண்டுத்தாள் பிரதிகள் மூலமாகவும் சுவிசேஷம் பரவ முயற்சி செய்தார். அக்காலத்தில் திருநெல்வேலியில் அச்சுக்கூடம் இல்லை. முண்டுத்தாள்கள் சென்னையிலிருந்து அச்சிடப்பட்டு வந்தன. இதனால், செலவு அதிகமானதோடுகூட, தாமதமும் ஏற்பட்டது. இவைகளை நிவிர்த்தி செய்ய நாகர்கோயிலிருள்ள அச்சுக்கூடத்தை உபயோகித்து, அங்குள்ள லண்டன் மிஷனெரி சங்கமும், திருநெல்வேலி சி.எம்.எஸ். மிஷனும் இதன் மூலமாய் சிறிது காலத்தில் சிறந்த கிறிஸ்தவ சுவிசேஷ ஊழியம் நடைபெறலாயிற்று.

**ரேனியஸ் ஐயரின் இறுதிப் பணிகள் :-**

கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களுக்குள் சுவிசேஷ வேலையைச் செய்ய ஆரம்பித்தார். புளியங்குடி என்னும் கிராமத்திலுள்ள சில இந்து மக்கள் அவரால் போதிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்வாறு ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு அவர்களுடைய இனத்தார் பல்வேறு வகைகளில் இடையூறு செய்தார்கள். அவைகளைப் பொருட்படுத்தாமல், புதுக் கிறிஸ்தவ மக்கள் ஆச்சரியமான விதமாய் விசுவாசத்தில் வேரூன்றி கிறிஸ்துவின் மெய்யடியார்களாத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் மாறுதல் காணப்பட்டது. அதைக் கண்ட அநேகர் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவச் சபையில் சேர முன் வந்தார்கள்.

## பிப்ரவரி மாதம் நமது ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணைந்த புதுமணத் தம்பதி

**04.02.2023** திரு. S. கிருஷ்ண சிவசுப்பிரமணியன் &
திருமதி. E. பானுமதி

**09.02.2023** திரு. V. பால் மெர்சன் & திருமதி. J. ஏஞ்சலின் கிரேஸியா

**10.02.2023** திரு. G. காட்சன் - திருமதி. A. ஷைலின் நிஷா

**10.02.2023** திரு. B. டேனியல் - திருமதி. D. மெர்ஸி பாக்கியவதி

திருமண பந்தத்தில் இணைந்த இப்புதுமண தம்பதிகளை வாழ்த்துகின்றோம். இவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, வையகத்தில் எல்லா சீருடனும், சிறப்புடனும், எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ ஜெபிப்போம்.



## பிப்ரவரி மாதம் இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்கள்

**02.02.2023** திரு. G.D.J. ஆண்ட்ரூ

**09.02.2023** திருமதி. G. மனோரஞ்சிதம்

**14.02.2023** திரு P. ஜார்ஜ்

கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்களின் பிரிவினால் வாடும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு தேவன்தாமே சமாதானத்தையும் ஆறுதலையும் அருளிச் செய்வாராக.

## பிப்ரவரி மாதம் ஞானஸ்நானம் பெற்றவர்கள்

**குழந்தைகள் ஞானஸ்நானம்**

**08.02.2023** S. கிரேசினா பிரின்சஸ்

**19.02.2023** P. பெலிக்ஸ் பிரவீன்
P. ஸ்டெஸி


**25.02.2023** ஜோயன்னா ரூபி ஜோசுவா

**26.02.2023** A.S. ஷெரின் ஸ்டெஃபினா

**பருவ கடந்தவர்கள் ஞானஸ்நானம்**

**19.02.2023** P. ரெபேக்காள்

ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் இணைந்திருக்கும் இவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம். நல்ல மேய்ப்பனான தேவன்தாமே இவர்களை ஜீவிய காலமெல்லாம் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூட்டும்படி ஜெபிப்போம்.



## தூய பேட்ரிக்ஸ் தினம்

*நாள்* : **17.03.2023 வெள்ளிக்கிழமை**

*நேரம்* : **காலை 5.30 மணி திருவிருந்து ஆராதனை**

*செய்தி* : **Rev. J. இஸ்ரவேல் ஞானராஜ்** B.Sc.,B.D.,
(சேகர தலைவர், நாகலாபுரம்)

*யாவரும் ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

**குறிப்பு :**
திருவிருந்து ஆராதனை முடிந்தவுடன் சபையார் யாவருக்கும் காலை சிறப்பு உணவு வழங்கப்படும்.



# பாடல் பிறந்த வரலாறு

## சார்லஸ் வெஸ்லி

## (CHARLES WESLEY)

### பாடல் : "என்தன் ஆத்ம நேசரே"

"Jesus lover of my soul''

1861 ஆம் ஆண்டு அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஒரு போர்வீரன், இரவில் தனியாக ஒரு காட்டில் காவல் வேலையில் நிற்கும்போது, மனக்கலக்கம் அடைந்து 'என்தன் ஆத்ம நேசரே' என்ற பாடலை பாடிக் கொண்டிருந்தான். எதிரி ஒருவன் அவன் நிற்பதைக் கண்டு, மெதுவாக அவனை அணுகி, அவனைச் சுட்டுக் கொல்லுவதற்காகத் தன் துப்பாக்கியை குறி வைத்தான். அவன் பாடுவதைக் கேட்டு அதை கவனிக்கலானான். இரண்டாவது கவியில், 'ஏதுமற்ற ஏழையை செட்டையாலே மூடுவீர்' என்ற வார்த்தைகளைக் கேட்டவுடன், அவனைச் சுடாமல், சத்தமில்லாமல் திரும்பிப் போய்விட்டான். பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின் இவர்கள் இருவரும் ஒரு கப்பல் பிரயாணத்தில் சந்திக்க நேரிட்டது. போர்வீரன் அதிசயமாகக் காக்கப்பட்டதை அப்போது தான் உணர்ந்தான். 'வெள்ளம் போன்ற துன்பத்தில் திக்கில்லாமல் தடுமாறிப் போகையில்' எனும் இப்பாடலைப் பாடி ஆறுதலும் பாதுகாப்பும் பெற்றான்.

இப்பாடலை எழுதியவர், மெதடிஸ்டு சபையை ஸ்தாபித்த ஜான் வெஸ்லியின் சகோதரரான சார்லஸ் வெஸ்லி என்னும் ஆங்கிலச் சபைப் போதகர். அவர், சாமுவேல் வெஸ்லி என்னும் போதகருக்குப் பதினெட்டாவது குழந்தையாக 1707 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 18ஆம் தேதி, இங்கிலாந்து எப்வொர்த் என்னும் ஊரில் பிறந்தார். இளவயதில் வெஸ்டுமினிஸ்டர் என்னுமிடத்தில், பின்னர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்று பட்டம் பெற்றார். ஆக்ஸ்ஃபோர்டில் பயிலும்போது, 'ஆக்ஸ்ஃபோர்டு மெதடிஸ்டுகள்' என்னும் ஒரு குழுவை ஸ்தாபித்தார். இந்தக் குழுதான், பின்னர் மெதடிஸ்டு சபையாகத் துளிர்த்தது.

சார்லஸ் வெஸ்லி 6500க்கும் அதிகமான பாடல்களை



எழுதியுள்ளார். அப்பாடல்களின் அதிகமாக திருமறையிலுள்ள வசனங்களே உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. "என்தன் ஆத்ம நேசரே' என்னும் பாடல் 1740ஆம் ஆண்டு எழுதப்பட்டது. "உலகத்திலுள்ள எல்லா அரசர்களும் பெற்ற கீர்த்தியை விட இந்தப் பாடலை எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்குமனால், அதையே மேலானதாகக் கருதியிருப்பேன்" என்று ஹென்றிபீக்கர் என்னும் போதகர் ஒருமுறை கூறியுள்ளார். ஆனால் சார்லஸ் வெஸ்லி அவர்கள் அதை ஒரு சிறந்த பாடலாகக் கருதவில்லை. ஆகையால் அவர் இறந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னால்தான் இப்பாடல், முதல்முறையாக வெளியிடப்பட்டது. ஆயினும் கிறிஸ்தவ உலகில் இது மிகச் சிறந்த பாடலாகக் கருதப்பட்டு அநேகமொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இப்பாடல் எழுதப்பட்ட சந்தர்ப்பத்தைக் குறித்து பல கருத்துக்கள் நிலவி வருகின்றன. வல்லூரால் துரத்தப்பட்ட பறவை ஒன்று, ஒருமுறை வெஸ்லி போதகரின் அறைக்குள் புகுந்து, அவரது அங்கியில் அடைக்கலம் புகுந்ததைக் கண்டு இப்பாடலை எழுதியதாகவும், கடலில் அலைகள் திரண்டு அவர் பிரயாணமான கப்பலைத் தாக்கியபோது இதை எழுதியதாகவும், ஒரு சமயத்தில் வெறியர்கள் பலர் அவரைத் தாக்கியதால், அவர் தப்பியோடி மறைந்திருந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியதாகவும் கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் அவர் ஆண்டவரின் அன்பைக் குறித்துப்பாடிய ஆயிரக்கணக்கான பாடல்களில் இதுவும் ஒன்றேயொழிய வேறு காரணங்களால் எழுதப்பட்டதென்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. மெதடிஸ்டு சபை ஆரம்பமான சில மாதங்களில் அவருக்கு ஏற்பட்ட ஆவிக்குரிய மாறுதலின் விளைவாகவே இப்பாடல் எழுதப்பட்டதென்று ஐயமறக்கூறலாம்.

இப்பாடலை எழுதி சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் 1788இல் சார்லஸ் வெஸ்லி போதகர் லண்டன் மாநகரில் காலமானார். ஆயினும் அவர் எழுதிய 'என்தன் ஆத்ம நேசரே' 'இன்று கிறிஸ்து எழுந்தார்' 'அன்பின் ரூபி மோட்சானந்தம்' 'பாவிக்காய் மரித்த இயேசு' 'கிறிஸ்து வீரரே' முதலிய ஆயிரக்கணக்கான பாடல்களின் வாயிலாகக் கிறிஸ்து சபை இன்றும் அவரை நன்றியுடன் நினைவு கூறுகிறது.

மார்ச் 2023

# வேதாகமத்திலிருந்து கேள்விகள்



(மாற்கு)

1. காலத்தை நாம் அறியாதபடியினால் நாம் எப்படி இருக்க வேண்டும் என இயேசு கூறியுள்ளார்?
2. எது வசனத்தை நெருக்கிப் போடுகிறது?
3. யோசேப்பு யார்? அவர் செய்தது என்ன?
4. தேவ தூதர்கள் யாருக்கு ஊழியம் செய்தார்கள்?
5. அபியத்தார் யார்? அவர் செய்தது என்ன?
6. இயேசு எப்பொழுது ஆவியில் பெருமூச்சு விட்டார்?
7. "கொர்பான்" என்பது என்ன? அதன் மூலம் எதை அவமாக்குகிறார்கள்?
8. "முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" இருப்பிடம் எழுதுக.
9. இயேசு ஆயக்காரரையும், பாவிகளையும் யாருக்கு ஒப்பிடுகிறார்? இயேசு தன்னை யாருக்கு ஒப்பிடுகிறார்?
10. பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கேட்ட கேள்வி என்ன? இயேசு கூறிய பதில் என்ன?
11. ஒரு வசனம் மூன்று முறை, 5 வசனங்களுக்குள் வருகிறது, அந்த வசனத்தை எழுதவும்.
12. 'எப்பத்தா' என்பதற்கு அர்த்தம் என்ன? இந்த வார்த்தை எப்பொழுது உபயோகப்படுத்தப்பட்டுள்ளது?
13. யாருக்கு "பொவனெர்கேஸ்" என்கிற பெயரிடப்பட்டது?
14. தன்னை கர்த்தர் என்று யாரிடம் இயேசு கூறினார்? அந்த நபர் செய்தது என்ன?
15. சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிட்டதைக் காட்டிலும் அதிகமான நியாயத்தீர்ப்பு எதனால் நடக்கும்?

குறிப்புகள் :

1. A4 பேப்பரில் விடைகளை எழுத வேண்டும்.
2. **ஒரு கேள்விக்கு இரு வகையான பதில்கள் இருந்தால் அந்த கேள்விக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.**
3. **வசனத்தை அப்படியே எழுதக்கூடாது, விடைகளை மாத்திரம் எழுத வேண்டும்.**
4. இருப்பிடம் கட்டாயம் எழுத வேண்டும்.
5. 15ம் தேதிக்குள் விடைத்தாள்களை வேதவினா பெட்டியில் போட வேண்டும்



## பிப்ரவரி மாத பதில்கள்

மத்தேயு

1. தேவதூதர்களைப் போல இருப்போம் - மத்தேயு 22:30
2. மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவனை - மத்தேயு 10:32
3. இருளில் இருக்கும் ஜனங்கள் - மத்தேயு 4:15
4. பிள்ளைகளைப் போல் தன்னைத் தாழ்த்துகிறவன் - மத்தேயு 18:3,4
5. காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டவர்கள் - மத் 18:15
6. மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் - மத்தேயு 13:15
7. வேதபாரகர், பரிசேயர் - மத்தேயு 23:2
8. ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் - மத்தேயு 12:31
9. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், ஆசீர்வதியுங்கள், நன்மை செய்யுங்கள், ஜெபம் பண்ணுங்கள் - மத் 5:44-48
10. நீதிமான்கள் நித்திய ஜீவன் அடையவும் போவார்கள் - மத்தேயு 25:46
11. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள் - மத்தேயு 9:13
12. இயேசு - மத்தேயு 3:12,13
13. இயேசு தமது ஆவியை விடும்போது - மத்தேயு 27:50-52
14. பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் உபதேசயம் - மத்தேயு 16:11,12
15. மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து - மத்தேயு 12:36,37

## பிப்ரவரி மாதம் வேதாகம புதிர் சரியான விடை எழுதியவர்கள்

திரு. J. முத்துமாணிக்கம் ஆபிரகாம்
திரு. D. காட்வின் ஆண்ட்ரூஸ்
திரு. K. சாலமோன் ராஜா
திருமதி. விமலா ஜெயகுமார்
திருமதி. விஜயா ஜெபராஜ்
திருமதி. மல்லிகா
திருமதி. ராணி இன்பராஜன்
திருமதி. குளோரி தாமஸ்
திருமதி. ஃபிரிடா ஹென்றி
திருமதி. கஸ்தூரி தமிழரசன்
திருமதி. ஜோதி ஜெயராஜ்
திருமதி. ஜெயபிரியா பெல்சன்
திருமதி. ரெஜினா கோயில்மணி
திருமதி. A. புஷ்பராணி
திருமதி. A. ஆதி சிரோன்மணி ஞானதீபம்

திருமதி. C. சரோஜினி சந்திரன்
திருமதி. D. எலிசபெத் நோவா
திருமதி. E. பியூலா எபநேசர்
திருமதி. I. குளோரி ஜோசப்
திருமதி. J. மாலதி போர்டு
திருமதி. J. பத்மா ஜெபராஜ்
திருமதி. J. ஞான கிருபா விக்டோரியா
திருமதி. K. விக்டோரியா கனகராஜ்
திருமதி. N. ஜான்சிராணி தாமஸ்
திருமதி. P. லலிதா
திருமதி. R. ஜெபராணி ரவிலாரன்ஸ்
திருமதி. S. பரிபூரண பாக்கியவதி
திருமதி. S. திலகராணி
திருமதி. T. எஸ்கிளின்

## மார்ச்

| | | | |
|---|---|---|---|
| 1 | சங்கீதம் 60 | அப். 19-20 | எண்ணாகமம் 1-2 |
| 2 | சங்கீதம் 61 | அப். 21-22 | எண்ணாகமம் 3-4 |
| 3 | சங்கீதம் 62 | அப். 23-24 | எண்ணாகமம் 5-6 |
| 4 | சங்கீதம் 63 | அப். 25-26 | எண்ணாகமம் 7-8 |
| 5 | சங்கீதம் 64 | அப். 27-28 | எண்ணாகமம் 9-10 |
| 6 | சங்கீதம் 65 | ரோமர் 1-2 | எண்ணாகமம் 11-12 |
| 7 | சங்கீதம் 66 | ரோமர் 3-4 | எண்ணாகமம் 13-14 |
| 8 | சங்கீதம் 67 | ரோமர் 5-6 | எண்ணாகமம் 15-16 |
| 9 | சங்கீதம் 68 | ரோமர் 7-8 | எண்ணாகமம் 17-18 |
| 10 | சங்கீதம் 69 | ரோமர் 9-10 | எண்ணாகமம் 19-20 |
| 11 | சங்கீதம் 70 | ரோமர் 11-12 | எண்ணாகமம் 21-22 |
| 12 | சங்கீதம் 71 | ரோமர் 13-14 | எண்ணாகமம் 23-24 |
| 13 | சங்கீதம் 72 | ரோமர் 15-16 | எண்ணாகமம் 25-26 |
| 14 | சங்கீதம் 73 | 1கொரி. 1-2 | எண்ணாகமம் 27-28 |
| 15 | சங்கீதம் 74 | 1கொரி. 3-4 | எண்ணாகமம் 29-30 |
| 16 | சங்கீதம் 75 | 1கொரி. 5-6 | எண்ணாகமம் 31-32 |
| 17 | சங்கீதம் 76 | 1கொரி. 7-8 | எண்ணாகமம் 33-34 |
| 18 | சங்கீதம் 77 | 1கொரி. 9-10 | எண்ணாகமம் 35-36 |
| 19 | சங்கீதம் 78 | 1கொரி. 11-12 | உபாகமம் 1-2 |
| 20 | சங்கீதம் 79 | 1கொரி. 13-14 | உபாகமம் 3-4 |
| 21 | சங்கீதம் 80 | 1கொரி. 15-16 | உபாகமம் 5-6 |
| 22 | சங்கீதம் 81 | 2கொரி. 1-2 | உபாகமம் 7-8 |
| 23 | சங்கீதம் 82 | 2கொரி. 3-4 | உபாகமம் 9-10 |
| 24 | சங்கீதம் 83 | 2கொரி. 5-6 | உபாகமம் 11-12 |
| 25 | சங்கீதம் 84 | 2கொரி. 7-8 | உபாகமம் 13-14 |
| 26 | சங்கீதம் 85 | 2கொரி. 9-10 | உபாகமம் 15-16 |
| 27 | சங்கீதம் 86 | 2கொரி. 11-12 | உபாகமம் 17-18 |
| 28 | சங்கீதம் 87 | 2கொரி. 13 | உபாகமம் 19-20 |
| 29 | சங்கீதம் 88 | கலாத்தியர் 1-2 | உபாகமம் 21-22 |
| 30 | சங்கீதம் 89 | கலாத்தியர் 3-4 | உபாகமம் 23-24 |
| 31 | சங்கீதம் 90 | கலாத்தியர் 5-6 | உபாகமம் 25-26 |





தூத்துக்குடி சேகரம்

## 2023 ஜனவரி மாத வரவு செலவு கணக்கு

### வரவு

| | |
|---|---|
| Opening Balance | 17,59,152.79 |
| கோயில் காணிக்கை | 62576.00 |
| பரி. நற்கருணை காணிக்கை | 178250.00 |
| ஸ்தோத்திர காணிக்கை | 187402.00 |
| பலவித காணிக்கை | 1015.00 |
| சங்கக் காணிக்கை - சபை | 174980.00 |
| சங்கக் காணிப்பை - ஊழியர் | 19058.00 |
| அறுப்பின் பண்டிகை | 1000.00 |
| திருமணம் | 11560.00 |
| ஞானஸ்நானம் | 6926.00 |
| திருமண அறிக்கை கட்டணம் | 2500.00 |
| தசமபாகம் | 73,665.00 |
| தீப காணிக்கை | 5,205.00 |
| ஏலம் | 12,800.00 |
| பலவித வரவுகள் | 3870.00 |
| வீடு சந்திப்பு காணிக்கை | 59450.00 |
| Refund of Loan & Advances | 38750.00 |
| பாடகர் குழு வரவுகள் | 15000.00 |
| ஆலய தேவைகள் வரவுகள் | 7000.00 |
| வேதாகம நிலையம் வரவுகள் | 4170.00 |
| ஒருநாள் வருமான காணிக்கை | 3507.00 |
| மிஷனெரி காணிக்கை | 3,485.00 |
| சுவிசேஷ ஊழியம் | 5000.00 |
| மொத்தம் | 26,36,321.79 |

### செலவு

| | | | |
|---|---|---|---|
| குருமார் அலவன்ஸ் | | | 3,940.00 |
| உபதேசிமார் | | | 28,000.00 |
| எழுத்தர் | | | 29937.00 |
| ஆலய சிற்பந்தி பணியாட்கள் | | | 77161.00 |
| அறுப்பின் பண்டிகை செலவுகள் | | | 25305.00 |
| அச்சுக்கூலி | | | 18,015.00 |
| பழுது மற்றும் பராமரிப்பு பணி | | | 16,831.00 |
| பரி. நற்கருணை செலவுகள் | | | 13480.00 |
| மின் கட்டணம் | | | 65692.00 |
| தொலைபேசி கட்டணம் | | | 3,548.00 |
| பாடகர் குழு செலவுகள் | | | 25210.00 |
| ஆலய அலங்கரிப்பு | | | 281320.00 |
| உபசரணை | | | 25152.00 |
| ஆண்டு நிறைவு ஆராதனை உபசரனை சமையல் | | | 42400.00 |
| ஆலய தேவைகள் | | | 12160.00 |
| ஒருநாள் வருமான காணிக்கை | | | 3507.00 |
| திருமண்டல ஆயிரம் ஆயிரம் ஆண்கள் கூடுகை | | | 9300.00 |
| திருமண்டல வாலிபர் கூடுகை | | | 5000.00 |
| Advocate fees | | | 10000.00 |
| Advances | | | 4500.00 |
| Tower சந்திப்பு அறை new chair exp | | | 20200.00 |
| விக்டோரியா பிரைமரி வேன் அட்வான்ஸ் | | | 8,500.00 |
| Taxes | | | 13365.00 |
| வங்கி கட்டணங்கள் | | | 59.00 |
| Closing Balance | Cash | 15,583.00 | |
| | Bank | 1,20,827.40 | |
| | Dio. | 17,57,329.39 | 18,93,739.79 |
| மொத்தம் | | | 26,36,321.79 |

E & O E

**Rev. R.A.J. Selwyn Durai**
Pastorate Chairman

**Mr. P. Jebasingh**
Pastorate Treasurer